குகமயம்

# மயிலம் ஸ்ரீ ஷண்முகன் வண்ணப்பாட்டு

## காப்பு - வெண்பா

உலகுக்கு நற்பாட் டுரைக்கவெனக் காசை
நிலைசெயல் அழித்தல் நினது - வலியாகும்
தும்பிமுகா காப்பாற்று சொல்வண்ண மெல்லாமுன்
தம்பிகுகன் ஷண்முகன்மேல் தான்.

## நாட்டுச்சிறப்பு

### தேசிகதோடி - அடசாப்பு

சீர்கொண்ட தென்மயி லாசல நாடென்ற
பேர்கண்டு நாடிப் பெருங்கடல் நீர்மொண்டு
கார்கொண்டல் விண்ணடுத்து உல
கோரஞ்ச மின்விடுத்து அதி
ராக் இடிஇடித்து - மிக்க

மழைமுத்து மாலை
விழவைத்த தாலே
வழியற்று ஞாலம்
குழிவுற்று மேலே

வருநதியின் காட்சிசொலும் வகையறியேனே
மலைவிட்டு நீங்கிப்பொன் னலைகொட்டி மூங்கிற்றான்
குலமுற்றும் வாங்கிப்பன் மலரிட்டு வேங்கைத்தன்
தலைமுட்டு நதிவெள்ளமே ஏரி
குளங்குட்டை யவையுள்ளுமே இரு
திலமுற்றும் குதிகொள்ளுமே எங்கும்

உழவர்கள் ஓடி
விழவுகொண் டாடி
தொழுதெய்வம் நாடி
கழனிகள் தேடி

களஎருதின் ஏர்பூட்டி நிலமுழுவாரோ
பதனிட்ட நிலமுற்றும் விதைவிட்ட நயல்நாட்டுக்
களைவெட்ட வருமாதர் மதியொத்த முகநாண
மரைமொட்டு விரிவெய்தலும் அவர்
விழியொத்த கருநெய்தலும் நத்தை
தருமுத்து நகைசெய்தலும் கண்டு

காலால் மிதித்ததன்
மேலே பகைத்தவர்
போலே எடுத்தரி
வாளால் அறுத்தெரி

கரைசேர்ந்த களைக்குலத்தில் வண்டு பண்பாட

எருவைத்து வரநித்தம்
பிறையொத்து வளரப்பின்
கதிர்விட்டு முதிரத்தன்
தலைநட்டு விளையக்கண்
டகமுற்ற மிகுமாசையால் நிலம்

விளைவுற்ற தொகை பேசுவோர் அறு
வடை செய்ய விடையேசெய்வார் பின்னர்க்

குப்பல் செய்தது மோதி
நெற்பதர் கெடத்தூவிச்

சுப்புரத்தினம் ஓதும்
நற்கவிப் பொருள்போலும்

மலைபோல்நெல் வீடுவர இனிதினுகர் நாடே.

## நகரச்சிறப்பு

### தேசிகதோடி - ஏகம்.

கொட்டுமது சீதளக்க டப்பமலர் மீதுறத்த
ரித்தமுரு கோனமர்ப்ர
சித்தமயிலாசல நகர்ப்புகழை யோதிடக்குறித்ததிவ்
வண்ணம் இதைமுடிப்பது திண்ணம்,
அட்டதிசை யோடிவிண்மு கட்டினையு மோதிரவி
வட்டமுமிடாதுயுக முற்றினும்விழாதபடி இட்டனகர்
மாலையெனக் கட்டுமதிலும் அதனைச் சுற்றி அகழும்
மின்னுமணிக் கோபுரங்க ளின்சிகர மீதணிந்த
பொன்னுடைநிகேதனங்கள் விண்ணகரின் மாதர்தமை
இந்நகரில் வாருமென ஆடி அழைக்கும் அவரை ஓடிஇழுக்கும்.
வெள்ளிமலை போலுயர முள்ளபல மாளிகையிற்
புள்ளுலவுநேரமதை அள்ளிமணியாலெறியும் பிள்ளைக
ளுலாவுமந்த விதிப்பெருமை அதனை ஓதலருமை
சித்திரங்கொள் ஆலயத்தில் உற்றமுருகேசனுக்கு
நற்றிருவிழாவைபவ முற்றுபயில் கீதமுழக்கம் அதிக வேத
ஒழுக்கம்.
பூரண கும்பங்கள்வைத்துத் தோரண மலங்கரித்து
நாரின்விளக்கும்கொளுத்து வாரிலக்கிழத்தியர்க்கு
நாரணன் கொள்ளுந்திருவை ஒப்புரைத்தனன் கனக
சுப்புரத்தினம்

## மயிலை மலைச் சிறப்பு

### ஆநந்த பைரவி - அடசாப்பு

அறுபொறியின் வடிவாகி அங்கையிலே பரைதந்த
சத்திவாங்கி
அமரர்படுந் துயர்நீங்கச் சயமோங்க அசுரர்குல
மூலந்தன்னை

அடிகொண்டு களைகின்ற இளமைந்த னமர்கின்ற
அசலங்கொள்புகழ்தன்னை அறைகின்ற இதுவண்ணம்

அங்கண் ஞாலத்திருப்பவர் வானவர்
அங்ஙனேநின்று கண்டு துதித்திடத்
திங்கள்சூடுஞ்சிகரமு நாற்றிசைச்
சேருஞ் சாரலுஞ் சீதளத் தூற்றலும்

திரிகின்ற புயல்வேழமரிகண்ட வுடனோடச்
சரிகின்ற மலையென்று நரிகண்டங் ககம்வாட-
மலர்க்குலங்கள் பொழிதேனும் மஞ்சுமொழி பனியும்
சந்திரதாரையும் மஞ்சனநீராய்த்தவத்தர்
செஞ்சடையில் சோர மங்களப்பண் பாடிவண்டு

மகரந்தப் பொடிவாரித் துகள்மிஞ்சப் புவிவீச
வதிகின்ற குறமாதர் இருகெண்டை விழிகூச

மல்லிகைப்புதர் வெண்ணகையாடவும்
மாதுதனமிசை ஆலிலை போர்த்திடும்
நல்லதென்ற லணைந்திடக் கன்னிமா
நாணிமேனிச் சிலிர்த்துக் குலைந்திடும்.

தளிருற்ற குரவஞ் சந்தன மற்ற தருவுந்தம்
தறைகொட்ட நிறையுஞ் செங்கமலப் பொற்றடமுற்றும்
அரவுதரு மாணிக்கம் மரைமுத்தம் வரையீன்ற
வச்சிரம் பொற்சன்ன ராசி அற்புதங்கொள்
ஜோதிவல்லியிற்ற கலந்த போயவல்லன்

இருள்முற்று மொளியாகு மிகுரந்த மணிமாலை
எழிலுற்ற மலைமாது மிலைவுற்ற ளெனவோத

எங்கு நோக்கினும் புள்ளினத் தின்னொலி
இடையில் வேடர்செய் ஆட்டங்கள் பாட்டுகள்
தொங்குமாலையின் வெள்ளருவிக்குலம்
தூரநின்றிழி போதொரு சந்தப்பண்

தொழுபக்தர் முருகாஎன்
றழுகைக்கண் ணெழுமோசை
சுரமொத்த கரதாளம்
நிரையொத்த திடிமேளம்.

குஞ்சரி யோர்பாகம் குறவள்ளி யோர் பாகம் கொஞ்
சக்கைவேல் கொட்டொலியும் தழைத்தொளிரும்
கருணைநோக்கும் குளிர்வதன மீராறும் நளிர்பதமும்
கொண்ட கோயில்

குறைதீர விரைவாக வருவார்கள் ஒருகோடி
குகனே ஷண்முகனே என்றடிசேர நடமாடிக்

குப்பலாகப் பொற்காவடித் தோள் தூக்கிக்
கொள்கையாவுங் குமாரன் தன்மேலாக்கி
சுப்புரத்தினம் சொற்றமிழ்ப் பாவாக்கிற்
சூழத்தென் மயிலாசல மேநோக்கிச்
சுராதிபனை வாழ்த்திநலம் துய்ப்பரதி சோபிதமே

## நூல்

### செஞ்சுருட்டி-ஏகம்

சூரர்குலம் வேரறுக்க ஒருவேலும்-நான்
துணைஎனப் பிடித்திட இருகாலும்-எண்ணும்

காரியத்தை முன்னிட்டுவிற் கோலெடுத்து வேடர்புனம்
மாணைவிட்டுன் மெய்யுருவம் வேறுபட்டு நீமணந்த

ஏர்குறத்தி அணைத்திட அறுதோளும்-தெய்வ
யானையு மணைத்திட மாற்றுதோளும்-எண்ண

எந்நாளும் என்
துயர்மாளும்

ஓர்குடிமற்றோர் குடியைக் கெடட்பார்க்கும்-இந்த
உலகத்தை நினைத்திடில் உளம்வேர்க்கும்-கொடும்
மாரன்விடும் பாணமதி லேமனது நோகஇள
மாதர்வசமாகி யலையாது சுகமே பெருகச்
சிர்கடப்பந் தார்குலுங்க மயில்மேலே அலை
சீறுகடல் மேலுதித்த வெயில்போலே வர

இதுவேளை குகப்பெருமாளே
கற்பகப் பொதும் பரிடைக் குயில்பாடும்
கலாபமயில் ஓடிஅங்கு நடமாடும்

நற்றருக்கள் வாசமலர் உட்குடைந்து தேனினங்கள்
பொற்பொடியைச் சூரையிடும் அற்புதங் கொள்வான்
(மயிலம்)

சுற்றிவருவார் குடியி லுதித்தேனோ உனை
சுப்புரத்தினம் தமிழிற்றுதிப் பேனோ எக்

கதிதானோ மால்
மருகோனே!

## சஹானா ஏகம்

பொன்னடியைத் தந்தருளப்பா இப்போதொப்பாய் நான்
உன்னடிமை யல்லவோ செப்பாய் செப்பாய் செப்பாய்
சின்னமங்கையர்செய் மனப்பேதிப்பாலிப்பால் நான்
செய்வதறி யேன் மனக்கொ திப்பால் அப்பால் எனா
துனது. (பொ)

பூதலத்தை எண்ண இதயம் பயம் செய்யும் இதில்
புலைநடை கொள்விலை நயம் நயம் நயம்
ஆதலினின் சிதவிழியம் புயம் பெயும் நல்
அருள்தர வெண்டுமிச்சமயம் உயும்லயம் தெரிந்து [பொ)

ஏறுமயில் கார்கடல் என்னும்வன்னம் துன்னும் அதில்
இலங்குகண் மீனென மின்னும் மின்னும்
ஆறுகதிர்போல்முக மன்னும் என்னெஞ்சின்னம் அதில்
ஆவல்கெடச் சேவைசெய உன்னும்பின்னும்
உன்னன்பனுக்குப் (பொ)

சுந்தரிபராபரி மைந்தா எந்தாய் கந்தா அர
விந்தனை ஜயித்தவா வந்தாள் வந்தாள் வந்தாள்
தந்தைக்கு மந்திர முவந்தே தந்தாய் அந்தோ இங்குத்
தாசன் சுப்புரத்தின நலிந்தேன் சிந்தா குலந்தவிர்க்க

## (ஜன்னபியாராமா) என்ற வர்ணமெட்டு

கந்தப்பா வந்திப்போ தர
விந்தபா தங்கள் நீதர
எந்தப்போ தாகு மென்றே
ஏங்கிமனம் வாடுகின்றேன்
சந்தப்பண் ஓதி நின்றேன்

சாருமயூர கெம்பீர உதாரகுண (க)

ஏலகம்கனவெனில் அதிலும் கலகம் மலையெனப் பயிலும்
தொலையா விசாரம் உற்றேன் தூயநிலைக்
(காசை வைத்தேன்
தலைமேல் கரங்குவித்தேன் சரஹண பவகுக நினது
சமுக மிகவுரைத்தேன் (க)

மனமே குரங்கெனத் திரியும்
தினமே பவவினை புரியும்
தனமாதைக் கூட்ட எண்ணும்
தாய்க்கிழவி வீட்டின் கண்ணும்

இனிமேற் புகாத வண்ணம்
ஈரநற் போகம்உற் சாகமென் மேலிடவே (க)

வள்ளிமேல் சிந்தை கொண்டன்பாய்
புள்ளிமான் வந்ததோ என்பாய்
கள்ளத்தனமாக வஞ்சி
காதடைக்குதென்று கெஞ்சி
அள்ளித் தருமாலைக் கொஞ்சி
அத்தனையிற் சுப்புரத்தின நற்கவி மட்டுங்கலந்துணு
வாய் (க)

## இராகம் நாட்டை-தாளம் ஆதி

கதிர்விடு மறுமுக வடிவே-(மிகு)
கன்னிக் குறவஞ்சி தெய்வ குஞ்சரிக்கு நடுவே (கதி)
கவின்தரு மகுடஞ்சண் முகங்கிடந் தொளிரும்விண்
ணகம் படும் புகரின் மிடுநவமிடையே (கதி)

காதளந்துமுனை கூடிவந்து நுதற்கிழுகந்தருளெலாம்
பொழிந்து
மிகு கமலமி தெனக்கய லினமென அமுதெனக்
கண்டு களித்திடும் பன்னி ரண்டு விழி எழில்சேர் (கதி)

கன்னலி னினித்துக் ககன மதில் விடுத்த
மின்னலி னொளித்து மிளிரு நளினமல
ரின்னிதழ் விரித்து மிதய மதிலுதித்த
தண்ணருள் உகுத்துத் தரளச் சரம் குலுங்கப்
புன்னகை கொழிக்கு மிடை (கதி)

கடம்பணிந் தலங்க்ருதம் பொலிந் திளந் தனங்
குழைந் திலங்குசந் தனம் புனைந் தறம் மிறழ்ந்தவன்
குலந் தனின் முனிந் திருஞ் சிலம்பின்
உயர்ந்த ஜயங்கொள் புயங்களிடையே (கதி)

கனமணி வயிரப் பதக்கமிட் டிரட்டைச்சர
நெறிவுறப் பவளத்தடுக்கு மிட்டுக் கெட்டி முத்தச்
சரவகை யொடுருத்ர னக்கமிட் டொளிக்கச் சித்ர
நவநிலா பலவந் துதய மாவதென
நவினமாலை புனைந் துயருமார்பின் மிசை (கதி)

கனகாம்பரம் சிறந்து கச்சுப்படையிற் சுரிகை
அவிழாவகை வரிந்து பச்சைப்பட்டி னுத்தரியம்
புயநாவி வந்து குச்சுக்கட்டுடுக்கை எனப்
புகழோங்கி நின்ற பொற்கிளை யிடுப்பினிடை (கதி)

தண்டை யணியும் பதமிரண்டுமிணை முண்டகங்கள்
கண்டுபணி வோரதனில் வண்டுபொர மண்டிவெகு

கற்பகத்தி னற்குளிர்கி
டப்பதென்றுளத் தெழுந்த
சுப்புரத்தினம் உரைத்த
நற்பதத்தை யுச்சரிப்பர். (கதி)

## இந்துஸ்தான் ஆதி

சிங்கார ஷண்முகனே ஷண்முகனே
பரைமகனே நற்குகனே
இங்கே யுன்னடி யவனிமேல்
தங்கேன் மலரிணை யருள்கனிவால்

சம்சார சோக மயமே யலாது சுக
சஞ்சார மேது இகமே பொலாது இதில்
சந்தேகமேதுன் சுகமே நிலையாகும்

நீயேகதியாக கதியாக சுகபோக முண்டாக
நினைத்தனன் பரணருள் பாலா
அநந்தநாள் சுரர்மகிழ் வேலா

நீதாதேவ குஞ்சரி வள்ளி சமேதா
நிராதரன் மீதே நின்பாதார விந்தம்
அருளப் போகாதா வாதா நாதா

சீராருநன் மயிலம் நன் மயிலம்
வளமியலும் அன்பர்பயிலும்

திருவடி நிழலென அமையும்
தருவின மழகொடு குளிரும் (சீராரு)

சிங்கார கோகிலம் கீதமோத மிருதங்கம்
சிற்றலை போய் மோதப் பட்சிஜாலம் சிறைகொட்ட
ரீங்கார வண்டு சுரநீடமயிலாட ரங்கமாம்
சுப்புரத்ந தாசன் தாசன் விஸ்வாசன் கவிபாசன்

சுசமெது வெனிலுன தருளெனவே
சொலும் இதிற் பிறிதொருபொருள் கனவே

சூரசம்மாரா குமாரா மயூரா சுகுண
தீரா உதாரா புவனாதாரா துயர்
தீரவாரா திராய் கெம்பீரா

(பாலாபிஷேகப் பழநிமலையப்பன் என்ற மெட்டு)

மாசி மஹோத்ஸவமாம் எங்கள் வாத்ஸல்யன்
மாமயிலாசல னேவரு நாள்
பாசாதி பந்தம் தொலைந்தோம் கனிந்தோமல்
வீசன் தரிசனமே ஆநந்தம்

பராபரன் மயூரன் பார்வதி குமாரன்
தராதலா தாரன் ஜய வீரன் உதாரன்
பரிந்த குஞ்சரி வள்ளிக் கதிகஷய்யாரன்
பகையசுரரை வெல்லும் சுராதிகாரன்
பாலன் வடிவேலன் ஞாலம்புகழ் மேலோன்
பகரும் சதுர்மறை யுறையும் நன்மூலன்

மயிலாசலன் கருணைப்ரவாக விலோசனன்
மகாசீலன் அனுகூல ஸாஜ்வல்யன் மிகுகோலன்

மதியணிந்தவன் மகன் அதிக வைபோகன்
அதிகுண நிதிபதி கதிதரும் ஏகன்

அத்தன் பரிசுத்தன் நல்
வித்தை தப்ரசித்தன்
நித்தம் புகழ் சுப்பு
ரத்தின மிஷ்டன்

(6)

## பைரவி ரூபகம்

ஜாலம் செய்வதனால் அருள்தர (ஜால)
அனுகூலமுண்டோ முருகா உளமுருகா தினியும் (ஜா)

காலன் கடைவிழி பொறிபட
வேலின் முனையெனைக் கொலைசெய்யும்
ஞாலத்துயர் பொறுக்கேன் உயிர்துறப்பேன் உனை
(மறப்பேன் இனி
கோலவிழிப் படுகுழி மேலும்விழக் கடுவழி
போலும் ஒழிக்கு மிப்புவி (ஜா)

கோலாகல மயிலாசல
வேலாயுத அசுரோர் குல
காலனே பரைபாலனே வள்ளி
லோலனே மறை மூலனே இனி (ஜா)

ஞானம் ப்ரதானம் நானுன் பெயர் தானும்
நவின்றறியேன் பெரியோர்பாற் பயின்றறியேன்
எனினும் நலனே அறிகிலனே
புலனே சஞ்சலமே

புலைநடை எனதொரு குலநடை
கலைமுறை தலைமுறை யறிகிலன்

பொன்னெல்லாம் இந்த மண்ணெலாம் உயர்
விண்ணெலாம் பிற எண்ணெலாம்
ஈகுவ தாயினும் வேண்டேன்
இனி யுன தருள் வழித்தாண்டேன்

எந்தையே புவி விந்தையே சுற்றம் சந்தையே
முற்றும் நிந்தையே இதில்

ஏதுநலம் உனை அணுகிட
தாதுகலங்கிடு மெனதிடம் (ஜா)

ஈசகுகா முருகா இனி
இத்தரணிச் சுகம், மதிக்கேன் சுப்பு'
ரத்தினம் தருவிற்திறுப் பேன் உனை (ஜா)

## பைரவி—ஆதி

குஞ்சரி வள்ளிக்குமாரன் கொன்றை
கூன்பிறையான் நற்கு மாரன் அவன்
கஞ்சக்கழற்பதம் வாழ்க செங்
கலாபங்கொள் மாமயில் வாழ்க பகை
அஞ்சப்பிறங்கும்வை வேலும் ஐயம்
ஆர்த்திடும் கோழியும் வாழ்க உயர்
விஞ்சையர்போற்றுமிந் நாடும் மறை
விண் அறும் ஞானமும் வாழ்க. (கு)

□ □ □